RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 194 | ஜூலை.17 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## ஓரணியில் தமிழ்நாடு : 1,35,43,103 உறுப்பினர்கள் கழகத்தில் இணைப்பு மயிலாடுதுறையில் மக்களை சந்தித்த முதல்வர்

சென்னை, ஜூலை.17-

"ஓரணியில் தமிழ்நாடு" என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தில் மயிலாடுதுறையில் கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் மக்களை நேரடியாக சந்தித்து உறுப்பினர்களை சேர்த்தார்

நமது திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துச் சொல்லி, தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காக்க திராவிட முன்னேற்றக் கழகத்தில் மக்களை உறுப்பினர்களாக சேர்க்கும் "ஓரணியில் தமிழ்நாடு" என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தில் உறுப்பினர்கள் சேர்க்கையை கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் 3.7.2025 அன்று சென்னை, ஆழ்வார்பேட்டையில் மக்களை நேரடியாக சந்தித்து தொடங்கி வைத்தார்.



அதனைத் தொடர்ந்து, 10.7.2025 அன்று திருவாரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சன்னதி தெருவில் கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், "ஓரணியில் தமிழ்நாடு"என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தில், மக்களை நேரடியாக சந்தித்து, இத்திட்டத்தில் உறுப்பினர்களை சேர்த்தார்.

மேலும், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் கழக தகவல் தொழில்நுட்ப அணியால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையை (War Room) 12.7.2025 அன்று கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, திராவிட முன்னேற்றக் கழகத்தில் மக்களை உறுப்பினர்களாக சேர்க்கும் "ஓரணியில் தமிழ்நாடு" என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இணைக்கப்பட்ட மக்களின் விவரங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை தந்த கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றையதினம் (16.7.2025) "ஓரணியில் தமிழ்நாடு" என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தில் மன்னம்பந்தல் ஊராட்சி, அம்பேத்கர் தெருவில் மக்களை நேரடியாக சந்தித்து உறுப்பினர்களை சேர்த்தார்.

இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், மாவட்ட கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன், மன்னம்பந்தல் ஊராட்சி மன்ற தலைவர் சூர்யா, மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியச் செயலாளர் முருகமணி ஆகியோர் உடனிருந்தனர்.

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் அழைப்பை ஏற்று "ஓரணியில் தமிழ்நாடு" என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தில் இதுவரை 1,35,43,103 நபர்கள் இணைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறுபான்மை வாக்கை பிரிக்க விஜய்யை களமிறக்கும் பாஜக: அப்பாவு கருத்து

திருநெல்வேலி: ஜூலை.17-

சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பிரிக்கவே விஜய்யை பாஜக களமிறக்குகிறது என்று சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு கூறினார்.



நெல்லையில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறியதாவது: நடிகர் விஜய்யின் தாயார் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர். இதனால், சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பிரிக்கவே விஜய்யை பாஜககளமிறக்குகிறது. விஜய் வீட்டில் நடைபெற்ற வருமான வரிசோதனை குறித்து இது வரை சரியான தகவல்கள் வெளியிடவில்லை.

வருமான வரித்துறை அதிகாரியாக இருந்த அருண்ராஜுக்கு, தவெக கட்சியில் பதவியும் வழங்கப்பட்டுள்ளது. சாத்தான்குளம் சம்பவத்தில் அப்போதைய அரசு வழக்குப்பதிவு செய்யவே தயங்கியது. ஆனால், அஜித்குமார் விவகாரத்தில் உடனுக்குடன் வழக்கு பதிவு செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அப்பாவு தெரிவித்தார்.

## மதுரையில் ஆகஸ்ட்.25ல் தவெக 2வது மாநில மாநாடு: விஜய் அறிவிப்பு

சென்னை, ஜூலை.17-

தமிழக வெற்றிக் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு, வருகிற ஆகஸ்ட் மாதம் 25ஆம் தேதி (25.08.2025) திங்கட்கிழமை அன்று மதுரையில் நடைபெற உள்ளது என அக்கட்சியின் தலைவர் விஜய் அறிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில், "என் நெஞ்சில் குடியிருக்கும் தமிழக மக்களுக்கும், கழகத் தோழர்களுக்கும் வணக்கம். தமிழக அரசியல் களத்தின் முதன்மை சக்தியான தமிழக வெற்றிக் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு, வருகிற ஆகஸ்ட் மாதம் 25ஆம் தேதி (25.08.2025) திங்கட்கிழமை அன்று மதுரையில் நடைபெற உள்ளது என்பதை அறிவிப்பதில் மகிழ்கிறேன். வாகை சூடும் வரலாறு திரும்பட்டும். வெற்றி நிச்சயம். நன்றி." என்று பதிவிட்டுள்ளார். 'மாஸ்' காட்டிய விஜய்! தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநில மாநாடு விழுப்புரம்

விக்கிரவாண்டி அருகே உள்ள வி.சாலையில் கடந்த அக்டோபர் 27ம் தேதி நடைபெற்றது. அந்த மாநாட்டில் விஜய் மிக நீண்ட உரையாற்றினார். "திராவிடமும், தமிழ் தேசியமும் எங்களது இரு கண்கள். எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதுதான் நமது குறிக்கோள். பிளவுவாத சக்திகளும், ஊழல் மலிந்த அரசியலும் தான் நம் எதிரி." என்று விஜய் தனது உரையில் குறிப்பிட்டார். அந்த மாநாட்டில் திமுகவை அப்பட்டமாக விமர்சித்தார். மத்திய அரசையும் ஓரளவுக்கு விமர்சனம் செய்தார்.

பிரம்மாண்டம், வசீகரப் பேச்சு, ஆர்ப்பரித்தக் கூட்டம் என விஜய்யின் முதல் மாநாடு மிக்கப்பெரிய கவனம் பெற்றது. அந்த மாநாடு அவரது அரசியல் வாழ்க்கைக்கு ஒரு முக்கிய நகர்வாக இருந்தது. அதனைத் தொடர்ந்து கிட்டத்தட்ட 10 மாதங்களுக்குப் பின்னர் ஆகஸ்ட் 25ல் மதுரையில் 2வது மாநில மாநாடு நடைபெறும் என்று விஜய் அறிவித்துள்ளார்.

மதுரையும், அரசியலும்.. தமிழக அரசியல் களத்தில் மதுரை மிக முக்கியமான இடத்தைக் கொண்டுள்ளது. மதுரையும் அரசியலும் பிர்க்க முடியாதவை. எம்ஜிஆர் காலம் தொட்டு மதுரைக்கும் புதிதாக அரசியலில் தடம் பதிப்பவர்களுக்கு ஒரு 'ராசி' இருக்கிறது. அந்த 'ராசி' விஜய்க்கு எப்படிப் பொருந்துகிறது என்று பார்க்கலாம் என்ற எதிர்பார்ப்பு விஜய் அறிவிப்பால் ஏற்பட்டுள்ளது.

அதுவும் 2026 சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் சூழலில் தேர்தல் களத்தின் நாடித்துடிப்பை அறிந்துகொள்ளும் வகையில் விஜய்யின் இந்த மதுரை மாநாடு அமையும் என்று அரசியல் நிபுணர்கள் கணிக்கின்றனர்.

ஏற்கெனவே அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தனது தேர்தல் பிரச்சாரப் பயணத்தைத் தொடங்கி விட்டார். 'தமிழகத்தைக் காப்போம்' மக்களை மீட்போம்' என்ற பெயரில் அவரது பிரச்சாரம் சூடுபிடிதுள்ளது. அதேபோல் ஆளும் திமுகவும் 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற பிரச்சாரத்தை முன்னெடுத்துள்ளது. இந்நிலையில் தவெக மாநாடு மதுரையில் நடைபெறவிருப்பது மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. அண்மையில் சென்னை பனையூரில் தவெக முதல் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. அதில் விஜய் தனது கூட்டணி நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருந்தார். அதன் மீது இன்னும் சற்று உறுதியான நிலைப்பாடு மதுரை மாநாட்டில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## "எங்கள் கூட்டணியே ஆட்சி அமைக்கும் என்றுதான் அமித் ஷா சொன்னார்" : இபிஎஸ் மீண்டும் விளக்கம்

சிதம்பரம்: ஜூலை.17-

"தமிழகத்தில் கூட்டணி ஆட்சி என்று அமித் ஷா சொல்லவில்லை. எங்கள் கூட்டணியே ஆட்சி அமைக்கும் என்றுதான் சொன்னார். எங்கள் கூட்டணியைப் பொருத்தவரை நான் சொல்வதே இறுதியானது." என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.



அமித் ஷா பேசியது என்ன? கடந்த ஏப்ரல் 11ம் தேதி சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்த அமித் ஷா, "பாஜக தலைவர்களும், அதிமுக தலைவர்களும் இணைந்து கூட்டணியை உருவாக்கி இருக்கிறோம். வரும் 2026 சட்டப்பேரவைத் தேர்தலை தேசிய ஜனநாயக கூட்டணி (என்டிஏ) கட்சிகளுடன் இணைந்து சந்திக்க இருக்கிறோம். வரும் தேர்தலின் போது தேசிய அளவில் பிரதமர் மோடி தலைமையிலும், தமிழகத்தில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தலைமையிலும் போட்டியிட இருக்கிறோம்.

வரப்போகும் சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக அதிமுகவின் தேசிய ஜனநாயக கூட்டணி பெரும்பான்மையான வாக்குகளை பெற்று ஆட்சியமைக்கும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. பாஜகவும், அதிமுகவும் இணைந்துதான் தமிழகத்தில் கூட்டணி ஆட்சியமைக்கப் போகிறோம். அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தலைமையில்தான் கூட்டணி இருக்கும்.

அமைச்சரவை குறித்து வெற்றி பெற்ற பிறகு முடிவு செய்யப்படும். எங்களுடன் கூட்டணியில் இணைந்ததற்கு அதிமுக எந்த வித கோரிக்கையும், நிபந்தனையும் விதிக்கவில்லை. அதிமுகவின் உட்கட்சி விவகாரத்தில் பாஜகவின் தலையீடு ஒருபோதும் இருக்காது. கூட்டணியில் இணைவதன் மூலம் இருதரப்புக்குமே பலனிருக்கிறது. யார் யாருக்கு எத்தனை தொகுதிகள் என்பதும், வெற்றி பெற்ற பிறகு ஆட்சியில் எத்தகைய பங்கு என்பதும் பின்னர்தான் பேசப்படும்" என்று அமித் ஷா பேசியிருந்தார்.

சர்ச்சைகளும் விளக்கமும்: அமித் ஷாவின் பேச்சை வைத்து இன்றுவரை அதிமுக பாஜகவிடம் தன்னை அடகுவைத்துவிட்டது, பாஜக தமிழகத்தில் மறைமுகமாக ஆட்சி அமைக்க முயற்சிக்கிறது என்றெல்லாம் விமர்சனங்கள் எழுந்து வருகின்றன. இது குறித்து எடப்பாடி பழனிசாமியும் பலமுறை விளக்கம் கொடுத்துவிட்ட நிலையில், இன்றும் அதுபற்றி கேள்வி எழுப்பப்பட அவர் மீண்டும் விளக்கமளித்துள்ளார்.

சிதம்பரத்தில் இன்று செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த இபிஎஸ், "தமிழகத்தில் கூட்டணி ஆட்சி என்று அமித் ஷா சொல்லவில்லை. எங்கள் கூட்டணியே ஆட்சி அமைக்கும் என்றுதான் சொன்னார். எங்கள் கூட்டணியைப் பொருத்தவரை நான் சொல்வதே இறுதியானது." என்று விளக்கமளித்துள்ளார்.

## முன்ஜாமீன் கோரி மதுரை ஆதீனம் மனு: தீர்ப்பை தள்ளிவைத்தது நீதிமன்றம்

சென்னை: ஜூலை.17-

முன்ஜாமீன் கோரி மதுரை ஆதீனம் தாக்கல் செய்த வழக்கில் தீர்ப்பினை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் தள்ளி வைத்துள்ளது.



கடந்த மே 2ம் தேதி சைவ சிந்தாந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மதுரை ஆதீனம் காரில் வந்து கொண்டிருந்தபோது உளுந்தூர்பேட்டை சேலம் ரவுண்டானா பகுதியில் மதுரை ஆதீனத்தின் கார் மீது மற்றொரு கார் மோதி விட்டு நிற்காமல் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மாநாட்டில் பேசிய மதுரை ஆதீனம், தன்னை கொலை செய்ய சதி நடந்துள்ளது என்றும், இதில் பாகிஸ்தானுக்கு தொடர்பு இருக்கலாம் எனவும், தன் கார் மீது மோதிய காரில் வந்தவர்கள் குல்லா அணிந்தனர், தாடி வைத்திருந்தனர் எனவும் கூறியிருந்தார். இது சமூக வலைதளங்களில் வைரலாகப் பரவியது.

இந்நிலையில் இவரது பேச்சு இரு மதத்தினருக்கு இடையே குழப்பத்தையும், மோதலையும் உருவாக்கும் வகையில் இருப்பதாக கூறி சென்னையைச் சேர்ந்த வழக்கறிஞர் ராஜேந்திரன் சைபர் கிரைம் காவல்துறையில் அளித்த புகாரின் அடிப்படையில், ஆதீனத்துக்கு எதிராக நான்கு பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கில் முன் ஜாமீன் கோரி மதுரை ஆதீனம் தரப்பில் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி கார்த்திகேயன் முன்பு விசாரணைக்கு வந்தபோது, உள் நோக்கத்துடன் புகார் அளிக்கப்பட்டுள்ளதால் தனக்கு முன் ஜாமீன் வழங்க வேண்டும் என மனுதாரர் தரப்பில் தெரிவிக்கபட்டது.

காவல்துறை தரப்பில், கருத்து சுதந்திரத்தை தவறாக பயன்படுத்தி இருப்பதால் மதுரை ஆதீனத்திற்கு முன் ஜாமீன் வழங்கக் கூடாது, அவரின் முன்ஜாமீன் கோரிய மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என தெரிவிக்கபட்டது. இதையடுத்து நீதிபதி, முன்ஜாமீன் கோரிய மதுரை ஆதீனத்தின் மனுவின் மீதான தீர்ப்பினை தள்ளிவைத்து உத்தரவிட்டார்.



■ மதுரை மாவட்டம், செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம் பகுதியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமை தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன் ஆய்வு செய்து பொதுமக்கள் அளித்த மனு தொடர்பாக அதிகாரிகளிடம் கலந்துரையாடினார். திமுக ஒன்றிய செயலாளர்கள் சுதாகரன், எஸ் ஓ ஆர். தங்கபாண்டியன் செல்லம்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர் தங்கப்பாண்டியன், கோவிலாங்குளம் ஊராட்சி செயலாளர் சேகர், பன்னியான் ஊராட்சி செயலாளர் லட்சுமணன், கொடிக்குளம் ஊராட்சி செயலாளர் மணிகண்டன், கண்ணனூர் ஊராட்சி செயலாளர் பாண்டி, கருமாத்தூர் ஊராட்சி செயலாளர் ஜெயலட்சுமி மற்றும் அரசு துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



# மணப்பாறை அருகே பேருந்தை சிறை பிடித்து பள்ளி மாணவ மாணவிகள் போராட்டம்

மணப்பாறை, ஜூலை.17-

திருச்சி மாவட்டம் மணப்பாறை அடுத்த மருங் காபுரி ஊராட்சி க்குட்பட்ட திருநெல்லிப்பட்டி ஊரா ட்சியில் திருநெல்லிப் பட்டி, நல்லமநாயக்கன்பட்டி, கார்வாடி ஆகிய பகுதிக ளுக்கு அரசு நகர பேருந்துகள் வருவதில்லை எனக்கூறி அப்பகுதியைச் சேர்ந்த பள்ளி ம ாணவ, மாண வியர்கள், பொதுமக்கள் மணப்பா றையில் இருந்து கைகாட்டி வரை செல்லக்கூடிய அரசுப்பேருந்தை சிறை பிடித்து போராட் டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் நல்லமநாயக்கன்பட்டி, கார்வாடி,திருநெல்லிப்பட்டி ஆகிய பகுதிகளில் இருந்து சுமார் 100க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவியர்கள் இரண்டு கிலோமீட்டர் தொலைவில் உள்ள சுக்காம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளிக்கு நடந்தே செல்ல வேண்டி உள்ளதாகவும் இதனால் பலமுறை பேருந்து பணிமனை அதிகாரிகளை தொடர்பு கொண்டு பேருந்து இயக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆனால் பேருந்து வராததால் அப்பகுதியைச் சேர்ந்த பள்ளி மாணவ ,மாணவிகள் மற்றும் பொதுமக்கள் எங்களது ஊர்கள் வழியாக பேருந்துகளை இயக்க வேண்டும் என்று கூறி பேருந்தை சிறை பிடித்து சாலை மறியலில் ஈடுபட்டு வருகின்றனர்.

சம்பவ இடத்தில் மருங்காபுரி வட்டாட்சியர் சரவணபிரபு மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், புத்தநத்தம் காவல்துறையினர் பொதுமக்களிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு தற்காலிகமாக சாலை மறியல் கைவிடப்பட்டது.

# விருதுநகர் காவல்துறையை கண்டித்து திருப்பூர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்



திருப்பூர், ஜூலை.17-

விருதுநகர் காவல்து றையை கண்டித்து திருப்பூர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தினர் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் தோழர் மு. சீனிவாசன் மாநில துணைத்தலைவர்கள் ஆ.அம்சராஜ்,தே.முருகன் மாநில செயலாளர் க.நீதிராஜா விருதுநகர் ,

மாவட்ட தலைவர் பாண்டித்துரை, மாவட்ட செயலாளர் கா.கருப்பையா மாநில செயற்குழு உறுப்பினர் இரா.தமிழ் உள்ளிட்ட நிர்வாகிகள் மீது விருதுநகர் டி.எஸ்.பி யோகேஷ்குமார் உதவி ஆய்வாளர் ராமர் ஆகியோரின் தலைமையில் காவல்துறையினர் ரவுடி கும்பலுடன் வந்து காட்டுமிராண்டி தனமாக கொலைவெறி தாக்குதல் நடத்தி மனித உரிமை மீறல் வன்முறை வெறியாட்டம் நடத்தி உள்ளனர். மகளிர்துணைக்குழு நிர்வாகிகள் மீதும் விருதுநகர் காவல் துணைக் கண்காணிப்பாளர் யோகேஷ்குகேமார் தாக்குதல் நடத்தி இழிவுபடுத்தும் கொடுஞ் செயல் அரங்கேற்றம் வன்மையாகக் கண்டிக் கிறோம்.தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் இயக்க தோழர்களே! அனைவரும் அநீதிக்கெதிராக உறுதியோடு போராட்டம் முன்னெடுப்போம் என்று கோஷமிட்டனர்.இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட் டத்திற்கு தலைமை C. பாண்டிய ம்மாள் மாவட்ட தலைவர் (பொறுப்பு), கண்டன ஆர்ப்பாட்டம் விளக் கவுரை மா. பாலசுப்பிரமணியன் மாவட்ட செயலாளர்,க ண்டன உரை S.தங்கப்பாண் டியன் மாநில செயலாளர் தமிழ் நாடு ஆய்வக நுட்பனர் சங்கம் J.அந்தோணி ஜெயராஜ் மாநிலத் துணைத் தலைவர் தமிழ்நாடு மருத்துவத் துறை நிர்வாக அலுவலர் சங்கம் ,V. அன்னம் மாநிலச் செயலாளர் தமிழ்நாடு பகுதி சுகாதார செவிலியர் சங்கம் N. அன்னபூரணி மாநில துணைத்தலைவர் தமிழ்நாடு கிராம சுகாதார செவிலியர் சங்கம் ஆதிலட்சுமி மாநிலத் துணைத் தலைவர் தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம் N. பசுபதி தமிழ்நாடு தொழிற்பயிற்சி துறை அலுவலர் சங்கம் கி. ராணி மேனன் மாவட்ட தலைவர் ,கனகராஜ் வட்டாரத் தலைவர் தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, நிறைவுறை ஆ. அம்சராஜ் மாநிலத் துணைத் தலைவர் நன்றியுரை லி. தில்லையப்பன் மாநில செயற்குழு உறுப்பினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற மாநில, மாவட்ட, வட்ட கிளை நிர்வாகிகள் அனைத்து துறை வாரி சங்கத் தோழர்கள் மகளிர் துணைக்குழு உறுப்பி னர்கள் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தினை வெற்றி பெற செய்த ஆண்கள் 123 பெண்கள் 70 மொத்தம் 193 பேர் பங்கேற்றனர் பங்கேற்றனர்



■ திருப்பூர் மாநகராட்சி மண்டலம்3 வார்டு 35 கே.பி.என் காலணி பகுதியில் உள்ள வீடுகளில் குப்பைகளை மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என தரம் பிரித்து வழங்குவதை மாநகராட்சி ஆணையாளர் அமித் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார் உடன் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்



■ திருப்பூர் மாநகராட்சி மண்டலம்3 வார்டு 60 கோவில் வழி பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் கோவில் வழி பேருந்து நிலையத்தின் கட்டுமானப் பணிகள் குறித்து மாநகராட்சி மேயர் தினேஷ் குமார், மாநகராட்சி ஆணையாளர் அமித் ஆகியோர் நேற்று ஆய்வு மேற்கொண்டனர்.உடன் துணை ஆணையாளர் மகேஸ்வரி,உதவி ஆணையாளர் (மண்டலம் 3) ராஜசேகர், மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்..



■ திருச்சிராப்பள்ளி பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தை பயணிகள் பயன்படுத்தும் வகையில் அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதை தொடர்ந்து நகர் மற்றும் புறநகர் பேருந்து சேவைகளை நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு கொடியசைத்து துவக்கி வைத்தார்.உடன் மாவட்ட ஆட்சியர் சரவணன் , மாநகரக காவல் ஆணையர் காமினி, மாநகராட்சி மேயர் அன்பழகன், மாநகராட்சி ஆணையர் மதுபாலன்,உதவி ஆட்சியர் தீபிசானு, துறையூர் சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின் குமார், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் கோட்டத்தின் நிர்வாக இயக்குநர் தசரதன், மண்டல பொதுமேலாளர் சிங்காரவேலன், சதீஷ் குமார், மாவட்ட வருவாய் அலுவலர் ராஜலட்சுமி, மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள்,மாநகராட்சி அலுவலர்கள், போக்குவரத்து அலுவலர்கள் பொதுமக்கள் உட்பட்ட பலர் பங்கேற்றனர்



பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு

# தமிழகம் வெற்றி கழகம் செங்கல்பட்டு வட மேற்கு மாவட்டம் சார்பில் அவரது திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்

தாம்பரம், ஜூலை.17-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளை முன்னிட்டு தமிழக வெற்றி கழகம் செங்கல்பட்டு வடமேற்கு மாவட்ட சார்பில் கிழக்கு பகுதி செயலாளர் தாம்பரம் தினேஷ் தலைமையில் கிழக்கு தாம்பரம் பாரதமாதா தெருவில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவ சிலைக்கு செங்கல்பட்டு வடமேற்கு மாவட்ட செயலாளர் கில்லி டி.சரத்குமார் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் இதில் தாம்பரம் பிரவீன்குமார், வழக்கறிஞர் பிரவீன், ராஜேந்திரன், டிவிஜி, ஜே.குமரன், மதன், விஜய், லோகு, அசோக், ஹரிஷ், ஆரோக்கியராஜ், பவுதின்ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்



தாம்பரம் மேற்கு பகுதி இளைஞர் அணி சார்பில்

# 4ஆண்டு திமுக அரசின் சாதனைகள் விளக்க மாபெரும் தெருமுனை கூட்டம்

தாம்பரம், ஜூலை.17-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் தாம்பரம் மேற்கு பகுதி இளைஞர் அணி சார்பில் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் கோ.பிரதீப்குமார் தலைமையில், பகுதி செயலாளர் எஸ்.இந்திரன் அவர்கள் வரவேற்புரையில் நடைபெற்ற முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழா மற்றும் 4ஆண்டு கழக அரசின் சாதனைகள் விளக்க மாபெரும் தெருமுனை பொதுக்கூட்டத்தில்தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா, தலைமை கழக பேச்சாளர் ஒப்பிலாமணி, தலைமை கழக இளம் பேச்சாளர்கள் பம்மல் வீ.தினேஷ், புதுச்சேரி வெற்றிசெல்வன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்வில் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதி இளம்சுருதி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு.டி.பிரகாஷ், தலைமை கழக பேச்சாளர்கள் கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.சத்தியபிரபு, தாம்பரம் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் வீ.கார்த்திக், வே.சிவசுப்பிரமணியம், ஜெ.இன்சமாம், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள், மாவட்ட, மாநகர அணிகளின் நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட மாநகர பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# வருகின்ற ஜூலை 20ஆம் தேதி காரைக்குடி, கோவிலூர் சாலை, குளோபல் மிஷன் மருத்துவமனை வளாகத்தில் வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது

மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.17-

தமிழக அரசின் நிறுவனமான டான்செம் அமைப்பின், அங்கீகரி க்கப்பட்ட பயிற்சி நிறுவ னமான குலோபல் மிஷன் மருத்துவமனை சார்பில் ஐடிஐ, பாலிடெக்னிக் பொறியியல், கலை மற்றும் அறிவியல், நர்சிங் கல்லூரிகளில் பயின்ற மாணாக்கர்களுக்கான வேலைவாயப்பு முகாமினை நடத்தவுள்ளது.

தமிழ்நாடு அரசு தொழில் வளர்ச்சி கழகத்தின் கீழ் இயங்கும் டான்செம் நிறுவனம், உலகளாவிய வேலைவாய்ப்பு சார்ந்த பயிற்சிகளை அளித்து வருகிறது. உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள உரிய வேலைவாய்ப்புகளை கண்டறிந்து. அவர்களுக்கு அந்த வேலை சார்ந்த பயிற்சிகளை அளித்து, மாணாக்கர்களை வேலையில் அமர்த்தும் பணியினை டான்செம் சிறப்பாக மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, சிவகங்கை மற்றும் அதனை சுற்றியுள்ள மாவட்டத்தில் பயின்ற ஐடிஐ, பாலிடெக்னிக் டிப்ளமோ, பொறியியல் பட்டதாரிகள். ஹோட்டல் மேனேஜ் மென்ட், செவிலியர்கள் மற்றும் கலைக்கல்லூரியில் இளநிலைப் பட்டம் பெற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம் வருகின்ற ஜூலை 20ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இவ்வேலைவாய்ப்பு முகாமானது, குளோபல் மிஷன் மருத்துவமனை வளாகம்,கோவிலூர் சாலை, காரைக்குடி சிவகங்கை மாவட்டம் என்ற முகவரியில் காலை 8.30 மணியளவில் நடைபெறவுள்ளது. மேலும், இம்முகாமில் உள்நாடு மற்றும் வெளிநாட்டில் இருக்கும் முன்னணி நிறுவனத்தின் சார்பில் நேர்காணல்களும் நடத்தப்படும். அதில், வெற்றி பெறும் மாணவர்களுக்கு, அன்றே வேலைவாய்ப்புக்கான ஆணைகளும் வழங்கப்படும்.

இம்முகாம் தொடர்பான, கூடுதல் விபரங்களுக்கு www.tansam.org/GCC என்ற வலைத்தள முகவரியிலோ அல்லது fcc.tansam@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியின் வாயிலாகவோ அல்லது 8681878889, 9514838485, 98432 12111, 77084 53535 ஆகிய அலைபேசி எண்களின் வாயிலாகவோ தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் 6TOOT மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி.இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.



# பெருங்களத்தூர் காமராஜர் பிறந்தநாளை முன்னிட்டு ஏழை, எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது

பெருங்களத்தூர், ஜூலை.17-

செங்கல்பட்டு மாவட்டம் பெருங் களத்தூர் ஜி.எஸ்.டி.சாலையில் உள்ள காமராஜர் சிலைக்கு நாடார் பாதுகாப்பு பேரவை மற்றும் பெருங்களத்தூர் காமராஜர் நற்பணி மன்றம் மற்றும் பெருங்களத்தூர் பீர்க்கண்காரணை அனைத்து வியாபாரிகள் நலசங்கத்தினர் சங்கத்தினர் உள்ளிட்ட பல்வேறு அமைப்பின் நிர்வாகிகள் அலங்கரிக்கப்பட்ட காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மாரியதை செலுத்தினர்.

அதனை தொடர்ந்து ஏழை எளியோர்கள் நூற்றுக் கும் மேற்பட்டோருக்கு பெருங்க ளத்தூர் பீர்க்க ன்காரணை அனைத்து வியாபாரிகள் நலச்சங்கத்தின் தலைவர் கெ.பாலமுருகன் ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைப்பெற்றது.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட நாடார் பாதுகாப்பு பேரவை நிறுவன தலைவர் இ.எம்.சீனிவாசன், வணிகர் சங்க செயலாளர் சுப்புராமன், பெருங் களத்தூர் பீர்க்கன்காரணை குடியிருப்போர் நலச்சங்க தலைவர் மகேந்திரபூபதி உள்ளிட்டோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

அதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய இ.எம்.சீனிவாசன், பெருங்க ளத்தூர் மேம்பாலத்திற்கு காமராஜர் பெயரை சூட்ட வேண்டும் என தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்தார்.

இந்த நிகழ்ச்சியில் வணிகர் சங்க நிர்வாகிகள் பார்த்தீபன், பாலாஜி, சிதம்பரநாதன், வழக்கறிஞர் தினேஷ், பெருங்களத்தூர் காமராஜர் நற்பணி மன்ற நிர்வாகிகள் ராஜா, எத்திராஜ், நவநீதகண்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# தாம்பரத்தில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் காமராஜரின் 123வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுரிவ சிலைக்கு விடுதலை சிறத்தைகள் கட்சி மரியாதை

தாம்பரம், ஜூலை.17-

செங்கல்பட்டு மாவ ட்டம் தாம்பர த்தில் முன்னாள் முதல் அமைச்சர் காமராஜரின் 123வது பிறந்ததினம் இன்று கொண்டாடப்படுகிறது. காமராஜரின் பிறந்ததினத்தையொட்டி, பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் காமராஜரின் திருவுருவ படத்திற்கும், அவரது சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வருகின்றனர். அந்த வகையில் கிழக்கு தாம்பரம் பாரதமாதா தெருவில் உள்ள பெருந்தலைவர் காமாராஜர் அவர்களின் திருவுருவ சிலைக்கு விசிக மாவட்ட செயலாளர் சாமுவேல் எபிநேசர் தலைமையில் மாநில செய்தி தொடர்பாளர் பாவலன், சமூக ஊடக பிரிவு மாநில துணை செயலாளர் தாம்பரம் கதிரவன், தொகுதி செயலாளர் மு.ச.ரஞ்சன், நகர செயலாளர் ஆதிசாலமன், மாவட்ட அமைப்பாளர் ஜெயச்சந்திரன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் விசிக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.




# பழனியில் வழக்கறிஞரை தாக்கிய வழக்கில் குற்றவாளிகளை கைது செய்ய வேண்டி கண்டன ஆர்ப்பாட்டம்

திண்டுக்கல், ஜூலை.17-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற நுழைவாயில் முன்பு தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர்கள் சங்கங்களின் கூட்டுக் குழு சார்பாக மலைக் கோயிலுக்கு சாமி தரிசனம் செய்யச் சென்ற வழக்கறிஞர் பிரேமலதாவை அவதூறாகப் பேசிய வழக்கில் குற்றவாளிகளான கண்காணிப்பாளர் சுரேஷ் மற்றும் இரண்டு பாதுகாவலர்கள் இதுவரை கைது செய்யப்படாமல் உள்ள நிலையில் உடனடியாக அனைவரையும் கைது செய்ய வேண்டும் என வலியு றுத்தி பழனி ஒருங்கிணைந்த நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றன..

இந்நிகழ்வில் வழக்கறிஞர்கள் கலைஎழில்வாணன், ஆசைத்தம்பி, அங்குராஜ், தமிழ்வேந்தன், பாலசுப்ரமணியன், தண்டபாணி, செல்லகுமார், கவிதா, கோகிலா, குமார், மணிமேகலை, தினேஷ்குமார், குமாரசாமி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றன.

மேலும் இந்நிகழ்வில் தொடர்புடைய அனைத்து குற்றவாளிகளையும் காவல்துறை உடனடியாக கைது செய்யப்பட வேண்டும் என்று பல்வேறு கோஷங் களை எழுப்பியவாறு கண்ணன் ஆர்ப் பாட்டம் நடைபெற்றன...



■ மதுரை மாவட்டம் மேலூர் ஊராட்சி ஒன்றியம் கிடாரிப்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி தொடங்கி வைத்தார். திமுக ஒன்றிய செயலாளர் குமரன், பொய்கைகரைப்பட்டி திமுக நிர்வாகி தங்கம் கிடாரிப்பட்டி திமுக நிர்வாகி மதிவாணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுந்தரசாமி, சரஸ்வதி,கிடாரிப்பட்டி ஊராட்சி செயலாளர் ரகு பாண்டி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம் சேடபட்டி ஊராட்சி ஒன்றியம் பெருங்காமநல்லூர் வீரத் தியாகிகள் நினைவு மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் சேடப்பட்டி ஒன்றிய முன்னாள் சேர்மன் ஜெயச்சந்திரன் கலந்து கொண்டு பொதுமக்கள் அளித்த மனு தொடர்பாக அதிகாரிகளிடம் பேசினார். இந்த நிகழ்வில் உதவி திட்ட அலுவலர் ராஜேஸ்வரி வட்டார வளர்ச்சி அலுவலர் கண்ணன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பாலமுருகன்பெருங்காமநல்லூர் ஊராட்சி செயலாளர் சுருளி முத்து, காளப்பன்பட்டி ஊராட்சி செயலாளர் பாண்டி, செம்பரணி ஊராட்சி செயலாளர் சுரேஷ் பெரிய கட்டளை ஊராட்சி செயலாளர்கள் மணிகண்டன் மற்றும் அனைத்து அரசு துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## சிவகங்கை மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானது,

# வருகின்ற ஜூலை 18 அன்று காரைக்குடி மாநகராட்சி மற்றும் மானாமதுரை, சிவகங்கை, தேவகோட்டை, எஸ்.புதூர், கல்லல் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகிய பகுதிகளில் நடைபெறவுள்ளது: மாவட்ட ஆட்சியர் தகவல்

சிவகங்கை, ஜூலை .17-

சிவகங்கை மாவட்டத்தில் 15.07.2025 அன்று முதல் செப்டம்பர் 2025 வரை ஒவ்வொரு வாரமும், நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, 15.07.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை தொடர்ந்து, வருகின்ற ஜூலை 18 ஆம் தேதி காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 1,2,3 ஆகிய பகுதிகளுக்கென கழனிவாசல் முத்துகிருஷ்ணா மஹாலிலும், மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென இடைக்காட்டூர் ஊராட்சியிலுள்ள சமுதாயக்கூடத்திலும், சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென சோழபுரம் ஊராட்சியிலுள்ள மீனா திருமண மண்டபத்திலும், தேவகோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென சிறுமருதூர் ஊராட்சியிலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியிலும், எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியத் திற்குட்பட்ட பகுதிகளுக்கென எஸ்.புதூர் ஊராட்சியிலுள்ள சமுதாயக் கூடத்திலும், கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென குன்றக்குடி ஊராட்சியிலுள்ள வெள்ளாளர் சமுதாயக்கூடத்திலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது நடைபெறவுள்ளது.




மேலும், "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களின் வாயிலாக, நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் அந்தந்த துறைகளால் சேவைகள் வழங்கப்படும். அதில், நகர்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 13 துறைகளின் மூலம் 43 சேவைகளும், கிராமப்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 15 துறைகளின் மூலம் 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது.

இதில் சொத்துவரி, குடிநீர் வசதி உரிமங்கள் மற்றும் அனுமதி, கழிவு நீர் இணைப்பு, அடிப்படை வசதிகள், பராமரிப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், காலி மனைவரி, தெரு வியாபாரி அடையாள அட்டை, சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவைகள் நகர்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மேலும்,பட்டாவில் பெயர் மாற்றம் மற்றும் பட்டா பெயர் திருத்தம், பட்டா சிட்டா நகல், பிறப்பு, இறப்பு சான்று வாரிசு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட மனுக்களுக்கு இம்முகாமில் உடனடி தீர்வு காணும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் மனு அளித்திட விடுபட்ட தகுதியுள்ள பயனாளிகளும் இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொண்டு மனு அளிக்கலாம்.

எனவே, இம்முகாமினை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் வசிக்கும் அந்தந்த பகுதியில் முகாம் நடைபெறும் நாளன்று, உரிய ஆவணங்களுடன் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.



# சென்னை மாநகராட்சி புழுதிவாக்கம் 14வது மண்டல அலுவலகத்தில் ஆலோசனை கூட்டம்

புழுதிவாக்கம், ஜூலை.17-

சென்னை மாநகராட்சி புழுதிவாக்கம் 14வது மண்டல அலுவலகத்தில் ஆலோசனை கூட்டம் மண்டல குழு தலைவர், சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி கழகச் செயலாளருமான எஸ்.வி.ரவிச்சந்திரன் தலைமையில் கல்வி குழு தலைவர், பாலவாக்கம், விஸ்வநாதன் முன்னிலையில் 186வது மாமன்ற உறுப்பினர், ஜே. கே.மணிகண்டன் முந்தைய கோரிக்கைகளை உடனடியாக நடவடிக்கை எடுத்த அலுவலர்களுக்கு மற்றும் மண்டலக்குழு தலைவர், மண்டல ஆணையருக்கு நன்றியும், வாழ்த்துக்கள் தெரிவித்தார். தொடர்ந்து ஆலோசனைக் கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர்கள் 182 வது மாமன்ற உறுப்பினர், கே .பி.கே.சதீஷ்குமார்,191 வது மாமன்ற உறுப்பினர், ஜே.எல்.லட்சுமி,188 வது மாமன்ற உறுப்பினர், சமீனா செல்வம் , 190 வது மாமன்ற உறுப்பினர், சிவப்பிரகாசம் தங்களின் கோரிக்கைகளை விரைந்து முடித்து தருமாறு மண்டலக்குழு தலைவரிடம் கேட்டபோது சென்னை மாநகராட்சி அலுவலர்களிடம் ஏன் பணிகளை விரைந்து முடிக்கவில்லை என்று கேள்வி கேட்டதற்கு மண்டல ஆணையர் பணிகள் விரைவில் முடித்து தருகிறோம் என்று உறுதியளித்தார். ஆலோசனைக் கூட்டத்தில் மண்டல ஆணையர் , மண்டல உதவி ஆணையர், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# வருகின்ற 18.07.2025 அன்று, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலக வளாகத்தில் வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.17-

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு மாதமும் இரண்டாம் அல்லது மூன்றாம் வெள்ளிக்கிழமையன்று சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது. அதன்படி, வருகின்ற 18.07.2025 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 10.30 மணியளவில் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலக வளாகத்தில் சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது. இம்முகாமில், வேலை அளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களுக்கு தேவையான ஆட்களை தேர்வு செய்து கொள்ளலாம். சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த வேலை நாடுநர்கள் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பினைப் பெறலாம்.

மேலும், இம்முகாமில் இலவச திறன் பயிற்சிக்கான விண்ணப்பபடிவம், போட்டித் தேர்வுகளுக்கான இலவசப்பயிற்சி வகுப்பில் மாணவர் சேர்க்கை, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்ப படிவம் ஆகியவையும் வழங்கப்படும். எனவே, விருப்பமுள்ளவர்கள் பத்தாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை மற்றும் ஐ.டி.ஐ, டிப்ளமோ படித்த இளைஞர்கள் தங்களது கல்விச்சான்று, குடும்ப அட்டை, வேலைவாய்ப்பு அடையாள அட்டை, ஆதார் அட்டையுடன் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெறலாம். இம்முகாமில் பணிவாய்ப்பு பெறுவோருக்கு பதிவுமூப்பு ஏதும் ரத்து செய்யப்படமாட்டது. எனவே வேலைநாடுநர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

# மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு

சிவகங்கை, ஜூலை.17-

ரேபிஸ் என்பது பாதிக்கப்பட்ட விலங்குகளின் உமிழ் நீரில் இருந்து மனிதர்களுக்கு விலங்குகள் கடிப்பதன் மூலமாகவும், கீறல்கள் மூலமாகவும் பரவும் ஒரு கொடிய வைரஸ் நோயாகும்.

தெருநாய்கள் மட்டுமின்றி வீட்டில் உள்ள நாய், பூனை போன்ற விலங்குகள் கடித்தாலோ, கீறல்கள் ஏற்படுத்தினாலோ காயத்தை சோப்பு போட்டு குழாய் தண்ணீரில் நன்கு கழுவ வேண்டும். மேலும், அருகிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகளை அணுகி ரேபிஸ் தடுப்பூசி (RAY) மற்றும் ரேபிஸ் இம்யுனோகுளோபுலின் (RIG) (காயத்தின் தீவிர தன்மையை பொறுத்து) உடன டியாக போட் டுக்கொள் ளவேண்டும். ரேபிஸ் தடுப்பூசியானது அட்டவ ணைப்படி 0,3,7,28 ஆகிய நாட்களில் போடவேண்டும். இல்லையெனில், முழுமையான பலன் கிடைக்காது. நான்கு தவணை போட்டு முடிக்காதவர்களுக்கும் கூட ரேபிஸ் நோய் தாக்கம் ஏற்படும். எனவே, தடுப்பூசியினை அட்டவணைப்படி முழுமையாக செலுத்திக் கொள்ளவேண்டும்.

நாய்க்கடித்தவர்களுக்கு, அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தினந்தோறும் ரேபிஸ் தடுப்பூசி போடப்படும்.

மேலும், நாய் கடித்தவர்கள் உடனடியாக காயத்தை கழுவுதல், உடனடியாக மருத்துவ கவனம் பெறுதல், அட்டவணைப்படி தடுப்பூசி செலுத்தி முடித்தல் ஆகிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, ரேபிஸ் நோயிலிருந்து தங்களை பாதுகாத்து கொள்ளுதல் வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.



# இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பள்ளிக் கல்வித்துறையின் மூலம் உயர்கல்வி பெறுவதற்கான சிறப்பு குறைத்தீர்ப்பு முகாம் கூட்டம்

இராமநாதபுரம், ஜூலை.17-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பள்ளிக்கல்வித்துறையின் மூலம் உயர்கல்வி பெறுவதற்கான சிறப்பு குறைத்தீர்ப்பு முகாம் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையேற்று மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்களிடம் கோரிக்கை மனுக்கள் பெற்று உயர் கல்வி படிப்பை தொடர அலுவலர்கள் வழிகாட்டிட அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு அரசு வழிகாட்டுதலின்படி உயர்கல்வி தொடர இயலாத மாணவ, மாணவிகளை கண்டறிந்து அவர்களை உயர்கல்வி படிப்பை தொடர அரசு உத்தரவிட்டதற்கிணங்க தற்பொழுது 3 வட்டங்களாக சிறப்பு குறைதீர்க்கும் கூட்டம் நடத்திட திட்டமிட்டு 19.06.2025 அன்று நடத்தப்பட்ட சிறப்பு குறைதீர்க்கும் கூட்டத்தில் 70 மாணவ, மாணவிகள் உயர் கல்வி படிப்பை தொடர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல் இன்று 40 மாணவ, மாணவிகள் உயர்கல்வி படிப்பை தொடர நடவடிக்கை மேற்கொ ள்ளப்பட்டுள்ளது. இதிலும் பங்கேற்காத மாணவ, மாணவிகள் அடுத்து நடைபெறும் சிறப்பு குறைத்தீர்ப்பு கூட்டத்தில் பங்கேற்று உயர் கல்வி படிப்பை தொடர வேண்டும்.

இந்த சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தின் நோக்கம். 10 மற்றும் 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெறாமல் இருப்பவர்கள் மற்றும் தேர்ச்சி பெற்று உயர்கல்வி தொடர முடியாதவர்களுக்கு உயர்கல்வி பெற வழிகாட்டுவதை இந்த கூட்டத்தின் நோக்கமாகும். அதன்படி நடப்பு கல்வியாண்டில் உயர்கல்வி தொடர முடியாதவர்களை கண்டறிந்து அந்தந்த பகுதிகளில் உள்ள தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் மூலம் மாணவர்களை கண்டறிந்து மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் உயர்கல்வி அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு மாணவ, மாணவிகளுக்கு பெற்றோர்களும் உறுதுணையாக இருந்து உயர்கல்வி படிக்க வைக்க முன்வர வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

மேலும் உயர்கல்வி பெறுவதற்கான வழிகாட்டு மையம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் துவங்கப்பட்டு ஆசிரியர்கள் மூலம் தொலைபேசி வாயிலாக உயர்கல்விக்கான வழிகாட்டுதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே மாணவ, மாணவிகள் பயன்பெற்றுக்கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) திரு.பிரின்ஸ் ஆரோக்கியராஜ் அவர்கள், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.கார்த்திகேயன் அவர்கள், மாவட்ட ஆய்வு குழு அலுவலர் திருமதி.ஜேன் கிறிஸ்டிபாய் அவர்கள், மாவட்ட கல்வி அலுவலர்கள் (தொடக்க நிலை) திரு.சேதுராமன் அவர்கள், (மெட்ரிக்) திரு .ரவி அவர்கள், இடைநிலை திருமதி.கனகமணி அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கே.வி.குப்பம், தமிழக வெற்றிக் கழகம், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளரும், ஆடான் இன்ஸ்டியூட் நிறுவனர் மருத்துவர். எம். பிரபு பிறந்தநாள் விழா முன்னிட்டு

# கே வி குப்பம் சட்டமன்ற தொகுதி அலுவலகம் திறப்பு விழா, கல்லூரி மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கும் நலதிட்ட விழா மற்றும் இனிப்புகள் அன்னதானம் வழங்கும் விழா

வேலூர், ஜூலை.17-

வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் தாலுகா, வேப்பங்னேரி, வேலூர் கிழக்கு மாவட்ட, தமிழக வெற்றிக் கழகம்,கே.வி.குப்பம், தமிழக வெற்றிக் கழகம், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளரும், ஆடான் இன்ஸ்டியூட் நிறுவனர் மருத்துவர். எம். பிரபு பிறந்தநாள் விழா முன்னிட்டு, கே வி குப்பம் சட்டமன்ற தொகுதி அலுவலகம் திறப்பு விழா, கல்லூரி மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கும் நலதிட்ட விழா மற்றும் இனிப்புகள் அன்னதானம் வழங்கும் விழா கே.வி.குப்பம் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளரும், ஆடான் இன்ஸ்டியூட் நிறுவனரும், மாவட்ட மாணவரணி அமைப்பாளருமான மருத்துவர். எம்.பிரபு தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக தமிழக வெற்றிக் கழகம், வேலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் ஏ.நவீன் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி அலுவலகத்தைத் திறந்து வைத்து குத்துவிளக்கேற்றி, பிறந்தநாள் கேக் வெட்டி, நிர்வாகிகள், உறுப்பினர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் கேக், இனிப்புகள் மற்றும் (சிக்கன் பிரியாணி) அன்னதானம் வழங்கி விழாவை சிறப்பித்தனர். இதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை நலதிட்ட விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக அமீத், அனீஸ், மாவட்ட இணை செயலாளர் கருணாகரன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் சாரங்கன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் வெங்கடேஷ், லோகேஷ், கிழக்கு ஒன்றிய செயலாளர் பிரகாஷ், மேற்கு ஒன்றிய செயலாளர் சதீஷ், மத்திய ஒன்றிய செயலாளர் பிரசாந்த், மோனிஷ், கோபி, குடியாத்தம் வடக்கு ஒன்றிய செயலாளர் அரவிந்த்குமார், கொத்தமங்கலம் சரத்குமார், அஜித் (ஈ.பி) மற்றும் தமிழக வெற்றி கழகம், மகளிர் அணியினர் மலர்ரஜினிகாந்த், செவ்வந்தி விஜயகுமார், மாநில மாவட்ட ஒன்றிய ஊராட்சி அனைத்து பொறுப்பாளர்கள் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். இறுதியில் எல்.சத்தியன் நன்றியுரையாற்றி விழா நிறைவுபெற்றது.

# வேலூரில், அமைப்புசாரா அனைத்து தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் கலந்தாய்வுக் கூட்டம்: கூட்டமைப்பபுத் தலைவர் (ஆர்.டி.பி) ஆர்.டி.பழனி பங்கேற்று சிறப்புரை

வேலூர், ஜூலை.17-




வேலூர் மாவட்டம், வேலூர் கிரீன் சர்க்கிள், வி.டி.எம். மஹாலில், அமைப்புசாரா அனைத்து தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் கலந்தாய்வுக் கூட்டம், கூட்டமைப்பு தலைவரும், தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம் நிறுவனத் தலைவருமான (ஆர்.டி.பி) ஆர்.டி.பழனி தலைமையிலும், வேலூர் மாவட்ட கூட்டமைப்பின் கே.பி.பாஸ்கரன் பி.கார்த்திகேயன் வரவேற்புரையாற்றுகையில், அனைத்து தொழிற்சங்க கூட்டமைப்பு நிர்வாகிகள் முன்னிலையில் மாபெரும் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த கலந்தாய்வு கூட்டத்தில் தமிழ்நாடு மண்பாண்ட தொழிலாளர்கள் நல சங்க முன்னாள் தலைவர் நாராயணன், தரகர், பில்டர்ஸ் மற்றும் ரியல் எஸ்டேட், மனை தொழில் உரிமையாளர்கள் சங்கம் நிறுவனத் தலைவர் வி.ஆர்.கண்ணன், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் அனைத்து தொழிற்சங்க அமைப்பு செயலாளர் பி.கணேசன், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய உறுப்பினர் மகேஸ்வரன், இந்து ஆட்டோ முன்னணி சங்கம் பொதுச்செயலாளர் கோ.மகேஷ், சென்னை மண்டல கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் எஸ்.கெத்சி, கூட்டமைப்பின் பொருளாளர் ஆர்.எம்.எஸ். சிட்டிபாபு, கூட்டமைப்பின் துணைத் தலைவர் சிவானந்தம், தமிழ்நாடு விஸ்வகர்மா கைவினை கலைஞர்கள் சங்க சண்முகநாதன், அழகுகலை மருத்துவர் சங்கம் வெங்கிரு.பழனி, தையல் கலைஞர்கள் சங்கம் ஜெயபால், தென்னிந்திய சமையல் கலைஞர்கள் சங்க தலைவர் எஸ்.ராஜா, வேலூர் மாமன்ற உறுப்பினர் சீனிவாசன், தமிழ்நாடு சலவை தொழிலாளர்கள் நல சங்கம் சுரேஷ், சேலம் மண்டல கூட்டமைப்பு தலைவர் செந்தில்குமார், புதிய பாரதம் அமைப்புசாரா மற்றும் கட்டுமான தொழிலாளர்கள் நலமாநில சங்கம் நிறுவனத் தலைவர் டி.வேல்முருகன் மற்றும் அனைத்து தொழிற்சங்க தலைவர்கள் கலந்து கொண்டு கூட்டமைப்பு நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டு கலந்தாய்வு கூட்டத்தை சிறப்பித்து வியர்வை சிந்தி உழைக்கும் தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்கும், உழைப்பாளர்கள் வளர்ச்சியடைய பல்வேறு கருத்துகளையும் ஆலோசனைகளையும் வழங்கினர். தொழிலாளர்களுக்கு ஆதரவாக, கூட்டமைப்பின் நிர்வாகிகள் தங்களது ஆலோசனைகளை வழங்கி, பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்கள் சந்திப்பில் கூட்டமைப்பு கூட்டமைப்பின் தலைவர் ஆர் டி பி பழனி பேசியதாவது: அமைப்புசாரா அனைத்து தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் மத்திய, மாநில அரசுக்கு, உழைக்கும் தொழிலாளர்களின் வளர்ச்சிக் கு பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி வலியுறுத்தியுள்ளனர். இறுதியில் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஜி.எம். உமாசங்கர் நன்றியுரையாற்றி இக்கூட்டம் நிறைவுபெற்றது.

# கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் முப்பெரும் விழா




சிவகங்கை, ஜூலை.17-

சிவகங்கை மாவட்டம் கல்லலில் உள்ள கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் ஆண்டுதோறும் காமராசர் பிறந்த நாள் விழா, கல்வி வளர்ச்சி நாள் விழா மற்றும் இல க்கிய மன்ற துவக்க விழா ஆகிய மூன்றும் சேர்த்து முப்பெரும் விழாவாக கொண்டாடப்படும். அதேபோல் இந்த ஆண்டும் கொண்டாட ப்பட்ட விழாவிற்கு பள்ளித் தலைமையாசிரியர் அழகப்பன் தலைமை தாங்கினார். ஆசிரியர் பிரபு வரவேற்புரை ஆற்றினார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மத்திய அரசு வழக்கறிஞர் முருகேசன் காமராசரின் சிறப்புகளையும், சட்டம் சார் விழிப்புணர்வையும் மாணவ மாணவிகளிடம் எடுத்துக் கூறி அவர்களுக்கு புத்தகங்களைப் பரிசாக வழங்கினார். ஓவியப் போட்டி, பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட் டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது. இலக்கிய மன்ற செயலர் மாணவர் ஹரிஹரன் நன்றி கூறினார். மாணவ மாணவியரின் வரவேற்பு நடனம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சாரணர் இயக்கத்தைச் சேர்ந்த மாணவர்கள் பாடல் பாடினர். ஆசிரியர் கண்ணதாசன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். விழாவிற்கு வேண்டிய ஏற்பாடுகளை ஆசிரியர்கள் மாரிமுத்து, உமாராணி, கற்பகவல்லி மற்றும் பள்ளி மாணவத் தலைவர் குழு செய்தனர்.



# கல்லல் அரசு உயர்நிலைப் பள்ளியில் கல்வி வளர்ச்சி நாள் விழா

சிவகங்கை, ஜூலை.17-

சிவகங்கை மாவட்டம் கல்லலில் உள்ள கல்லல் மகளிர் அரசு உயர்நிலைப் பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை சார்பாக கல்வி வளர்ச்சி நாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. பள்ளியின் பட்டதாரி தமிழாசிரியை சொர்ணலதா வரவேற்புரை வழங்கினார். தலைமையாசிரியை சாந்தி விழாவிற்கு தலைமையேற்று கல்வி வளர்ச்சி நாள் குறித்து உரை நிகழ்த்தி மாணவிகளுக்கு இனிப்பு வழங்கினார். இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்ட பொருளாளரும், கல்லல் முருகப்பா மேல்நிலைப்பள்ளி ஆசிரியருமான பிரபு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவிகள் மத்தியில் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்து கூறினார். தங்கள் நடனம், கவிதை மற்றும் பேச்சு மூலம் காமராசரை மாணவிகள் நினைவுபடுத்தினர். சென்ற கல்வி ஆண்டில் பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் பாடம் வாரியாக உயர் மதிப்பெண் பெற்ற மாணவிகளுக்கு பெற்றோர்கள் முன்னிலையில் அந்தந்த பாட ஆசிரியைகள் பரிசுகளை வழங்கி கௌரவப்படுத்தினர். அறிவியல் பட்டதாரி ஆசிரியை தமிழரசி நன்றியுரை கூறினார். பள்ளி மாணவிகள், ஆசிரியைகள், மற்றும் அலுவலகப் பணியாளர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டனர்

காரைக்குடி அருகே கண்ணங்குடி கிராமத்தை சேர்ந்த கர்ப்பிணி பெண்ணுக்கு

# பிரசவம் பார்த்து தாய் சேய் இருவரையும் காப்பாற்றிய 108 ஆம்புலன்ஸ் சேவை மருத்துவ உதவியாளர் ரீனா இவாஞ்சலின்க்கு குவியம் பாராட்டு

காரைக்குடி, ஜூலை. 17-




சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே உள்ள சங்கராபுரம் கிராமத்தில் வசிப்பவர் இராமசுந்தரம் மனைவி பஞ்சவர்ணம் நிறைமாத கர்ப்பிணியான இவர் பிரசவ வலியால் இருந்தபோது கண்ணனங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ளவர்கள் 108 அவசர சேவை ஆம்புலன்ஸ் தகவல் தெரிவித்தனர் தகவலின் பெயரில் தேவகோட்டை 108 ஆம்புலன்ஸ் இரவு 11 : 48 மணி அளவில் கண்ணனங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்றனர் அங்கு சென்று பஞ்சவர்ணத்தை 108 ல் அழைத்து செல்லும் போது பஞ்சவர்ணத்தின் நிலைமை காரைக்குடிக்கு அருகில் சென்ற போது அதிதீவிரமாக இருந்ததால் 108 ஆம்புலன்சில் இருந்த மருத்துவ உதவியாளர் ரீனா இவாஞ்சலின் மற்றும் கண்ணங்குடி மருத்துவர் , செவிலியர் பிரசவம் பார்க்க நேரிட்டது இதில் சில நிமிட போராட்டங்களுக்கு பிறகு பஞ்சவர்ணத்திற்கு அழகான பெண் குழந்தை பிறந்தது அதன் பின்னர் காரைக்குடி மருத்துவமனைக்கு சென்று பின்னர் அழகான ஆண் குழந்தையும் பிறந்தது பஞ்சவர்ணம் மற்றும் அவரது குழந்தைகள் இருவரையும் ஆம்புலன்ஸில் ஏற்றிக் கொண்டு காரைக்குடி மருத்துவ மனைக்கு விரைந்து சென்றனர். சரியான நேரத்தில் காரைக் குடிக்கு செல்லும் வழியிலேயே அவருக்கு சிறந்த முறையில் சிகிச்சை வழங்கிய மருத்துவ உதவியாளர் ரீனா இவாஞ்சலின் மற்றும் வாகன ஓட்டுனர் விமானி யுவராஜ் ஆகியோர் சேவை குறித்து தகவலை அறிந்த கிராம மக்கள் அனைவரும் வெகுவாக பாராட்டியதாக, 108 ஆம்புலன்ஸ் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆண்ட்ரூஸ் மைக்கேல் தனது அறிக்கையில் தெரிவித்தார்.



# காட்பாடி பொன்னையில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் நலத்திட்டங்களை வழங்கி சிறப்பிப்பு

வேலூர், ஜூலை.17-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பொன்னை ஊராட்சி, தனியார் மஹாலில், நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் காதொலி கருவி கோரி மனுக்கள் அளித்த 3 மாற்றுத்திறனாளிகளுக்கு காதொலி கருவி களை, சிறப்பு அழைப் பாளராக கலந்து கொண்ட நீர்வள த்துறை அமைச்சர் துரைமுருகன் சிறப்புரையாற்றி நலதிட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சி வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி தலைமையில் நடைபெற்றது. இதில் மக்கள் பிரதிநிதிகள், அரசு துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# வேலூரில், மாநகர மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்

வேலூர், ஜூலை.17-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, தாராபடவேடு, சித்தூர் பேருந்து நிலையம் அருகில், வேலூர் மாநகர மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாள் விழா, இளம் தலைவர் ராகுல் காந்தி பிறந்த நாள் விழா மற்றும் அரசியலமைப்பு சட்டத்தை பாதுகாக்கும் பொருட்டு மாபெரும் பொதுக்கூட்டம் வேலூர் மாநகர மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் பி.டீக்காராமன் தலைமையிலும், எஸ்.சி/ எஸ்.டி துறை மாநில துணைத்தலைவர் சித்தரஞ்சன் வரவேற்பு உரையாற்றுகையில், ஓ.பி.சி பிரிவு மாநில பொதுச் செயலாளர் கே.எஸ். ரவி துவக்க உரையாற்றி மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக செய்தி தொடர்பாளர் திருச்சி வேலுச்சாமி, மாநில பொதுச் செயலாளர் வி. அருணாச்சலம் கலந்துகொண்டு பொதுக்கூட்டத்தை சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் இளங் கோவன், கணேசன், பாலகுமார், ரயில்வே கிருஷ்ணன், மாவட்டத் தலைவர் டிசிடியு, எ. பிரேம்குமார், தினேஷ், ஜான்பீட்டர், கிருஷ் ணகுமார், கப்பல் மணி, வாஹித் பாஷா, எல் ஆர் கே. லோகநாதன், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பெருந்தலைவர் காமராஜர் மற்றும் ராகுல் காந்தி பிறந்தநாள் விழா கொண்டாடுவது குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இறுதியில் மாவட்டத் தலைவர் டிசிடியு, எ.பிரேம் குமார் நன்றியுரையாற்றி பொதுக்கூட்டம் நிறைவு பெற்றது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161